# பண்டைய இலக்கியம்.

## பகுதி - அ.

1. குறிஞ்சி பாட்டு எத்தனை அடிகளை உடையது.

* குறிஞ்சிப் பாட்டு '261' அடிகளைக் கொண்டது.

2. எட்டுத்தொகை நூல்களில் புறநூல்கள் :

* புறநானூறு
* பதிற்றுப் பத்து.

ஆகிய இரண்டு நூல்கள் புறநூல்கள் ஆகும்.

3. நற்றிணையைத் தொகுத்தோன் :

* நற்றிணையைத் தொகுத்தோன் 'பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி' ஆவார்.

4. நற்றிணை சிறுகுறிப்பு :

* நல் + திணை → நற்றிணை
* நற்றிணை → நல்ல ஒழுக்கமாகும்
* 400 பாடல்களை கொண்டது
* அகநூல் ஆகும்
* ஆசிரியப்பாவால் ஆனது
* 9 - 12 அடியெல்லை கொண்டது.

5. குறுந்தொகையின் சிற்றெல்லை, பேரெல்லை :

குறுந்தொகை '4 சிற்றெல்லையும் 8 பேரெல்லையும்' கொண்டது

6. குறுந்தொகை தொகுத்தவர் :

குறுந்தொகை தொகுத்தவர் 'பூரிக்கோ' ஆவார்

7. ஐங்குறுநூறு நூலைத் தொகுத்தவர் :

* ஐங்குறுநூற்றை 'தொகுத்தவர் 'கூடலூர் கிழார்' ஆவார்.

8. அகநானூற்றின் மற்றொரு பெயர் :

* நெடுந்தொகை
* தொகை நூல்
* அகம்

9. புறநானூற்றினை முதன் முதலில் பதிப்பித்தவர் :

* புறநானூற்றை முதன் முதலில் பதிப்பித்தவர் 'உ.வே. சாமிநாத ஐயர்' ஆவார்.

10. பரிபாடல் குறிப்பு :

* அகமும் புறமும் சார்ந்த நூல் பரிபாடல் ஆகும்
* பாவகை - பரிபாடல்
* தொகுத்தவர், தொகுப்பித்தவர் தெரியவில்லை.
* 32 - 140 அடிஎல்லை

பகுதி - ஆ

1) அ) குறிஞ்சிப்பாடலில் அறத்தொடு நிற்றல் பற்றி கூறும் செய்திகள் :

* முன்னுரை
* அறத்தொடு நிற்றல்
* குறிஞ்சிப் பாட்டு கூறும் செய்தி
* முடிவுரை

முன்னுரை :

=> குறிஞ்சி பாட்டினை எழுதியவர் 'கபிலர்' ஆவார். இது 'அக' அழகனை கொண்டது. இதில் அறத்தொடு நிற்றல் பற்றி கூறும் செய்திகளை விரிவாக காண்போம்.

அறத்தொடு நிற்றல் :

=> அறத்தொடு நிற்றல் என்பது தோழி செவிலிக்கும் செவிலி நற்றாயிக்கும் நற்றாய் தந்தைக்கும் உண்மையாக இருப்பதே அறத்தொடு நிற்றல் ஆகும்.

குறிஞ்சிப் பாட்டில் கூறும் செய்திகள்:

"அன்னாய் வாழிவேண் டன்னை ஒண்ணுதல்
ஒலிமென் கூந்தல்........"

தாயே நீ வாழ்வாயாக!

ஒளிமிக்க நெற்றியினையும் நீண்டு செறிந்து வளர்ந்த மென்மையான தலைமுடியையும் உடைய என் தோழியின் உடலின் அணிகலன்கள்

நெகிழ்வடையவும், நோயுற்றது போல் தனிமையை நேசித்தும் வாழ்ந்து கொண்டிருக்கிறாள் இதற்கான காரணத்தை கண்டறியுமாறு தோழி செவிலித் தாயிடம் அறத்தொடு நிற்கிறாள்.

முடிவுரை:

⇒ அறத்தொடு நிற்றல் பற்றிய செய்தி இக்குறிஞ்சிப் பாட்டில் அமைந்துள்ளது.

2 அ) நற்றிணையில் வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியது பற்றி வரைக.

* முன்னுரை
* வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியது.
* முடிவுரை

முன்னுரை:

⇒ நற்றிணையை தொகுத்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி

⇒ நற்றிணை - நல்ல ஒழுகலாறு

⇒ அகத்திணை உடையது

⇒ ஆசிரியப்பாவினால் ஆனது

⇒ 9 முதல் 12 அடியெல்லையை உடையது.

வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியது:

⇒ துறை: வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

## கூற்று விளக்கம்:

⇒ தலைவி வாழும் ஊர் காட்டின் அருகில் உள்ளது. அங்கு பொறுமையாய் காத்திருக்கும் அவள், குறித்த பருவத்தில் என்னை அதாவது தலைவனை காணவில்லை என்றால் துன்புறுவாள். அவ்வானதை நினைந்து மனம் தலைவன் வருந்திக் கூறுவது.

"உடும்பு கொளீஇ வரி நுணல் அகழ்ந்து
நெடுங்கோட்டுப்......"

## உரை விளக்கம்!

⇒ தலைவியின் ஊர் காடு சூழ்ந்த பகுதியில் அமைந்துள்ளது. அங்கு உடும்பை கொன்றும், தவளையை அகழ்ந்து எடுத்தும், ஈசல்களை மண்ணை தோண்டி எடுத்தும் பகலில் முயலை வேட்டையாடியும் இரவில் தனது தோளில் சுமந்து வந்த பல்வேறு வகைபட்ட பண்டங்களையும் உணவுகளையும் விடியும் போது கள்ளுண்ட மயக்கத்தில் சொக்குகின்ற கிடப்பான் முல்லை மலரானது அக்காட்டில் உள்ள ஊரில் மலர்ந்திருக்கும். அத்தகைய ஊரில் இருந்தாலும் உள்ளம் பொறுமையாய் இருந்தது. இன்னும் நாம் செல்லாவிடின் அவள் உள்ளம் மிக வருந்தும்.

முடிவுரை

⇒ உடம்பு முதலியவற்றை வேட்டையாடு கள்ளுண்டு மயங்கி கிடத்தல் போன்ற போக்கும் ஏற்பட வந்த அந்நாரையோடு தலைவியாக இன்பம் சாய்பான் என்பதனை உள்ளுறையாக நின்ற கோலர் இப்பாடல் மூலம் விளக்குகிறார்.

13 அ) 'அகவன் மகளே அகவன் மகளே' என்னும் குறுந்தொகைப் பாடல் ஔவையார் கூறும் செய்திகள் :

* முன்னுரை
* அகவன் மகளே!
* முடிவுரை.

முன்னுரை :

⇒ குறுகிய அடிகளை உடையதால் குறுந்தொகை எனப் பெயர்பெற்றது.

⇒ இதனை தொகுத்தவர் தெரியவில்லை

தொகுத்தவர் - பூரிக்கோ

⇒ தொகை நூல்களுள் முதல் தொகுக்கப்பட்ட குறுந்தொகை.

அகவன் மகள் :

அகவன் மகளே! அகவன் மகளே!
மனவுக் கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்
அகவன் மகளே! பாடுக பாட்டே!

விளக்கம்:

=> தெய்வங்களையும் குலத்தோரையும் அழைத்து பாடுகின்றவள் கட்டுவிச்சி ஆவாள். சங்கு மணிகளால் ஆகிய கோவையைப் போன்ற வெண்ணிறமுடைய நல்ல நீண்ட கூந்தலையுடைய கட்டுவிச்சியே. பாடுக பாட்டே. நீ பாடிய பாட்டுகளில் தலைவனின் நல்ல நெடிய குன்றங்களை புகழ்ந்து பாடிய பாட்டை மீண்டும் பாடுக.

=> தலைவன் குன்றத்தைக் கட்டுவிச்சி அவள் பலமுறை பாட வேண்டும் என செவிலித்தாயின் உள்ளத்தில் ஐயத்தைத் தோற்றுவித்து அறத்தொடு நிற்பதே தோழியின் நோக்கமாகும்.

முடிவுரை:

=> அகவன் மகளே, பாடுக இன்னும் பாடுக குன்றம் பாடிய பாட்டே பாடுக.

14

## குறிஞ்சித் திணையின் கருப்பொருள்கள் :

* முன்னுரை
* கருப்பொருள்கள்
* முடிவுரை

**முன்னுரை :**

=> குறிஞ்சி திணையின் 'கருப்பொருள்கள்' குறித்து தொல்காப்பியத்தில்

"தெய்வம் உணாவே மா மரம் புள் பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப."

என்னும் நூற்பாவின் மூலம் அறியலாம்.

**குறிஞ்சித் திணையின் கருப்பொருள் :**

திணை : குறிஞ்சி

தெய்வம் : முருகன்

உணவு : தினை, வெதிர்நெல்

விலங்கு : புலி, கரடி

மரம் : கோங்கு

பறவை : மயில், கிளி

பறை : தொண்டகப் பறை

தொழில் : தேனெடுத்தல்

யாழ் : குறிஞ்சிப் பண்

பூ : குறிஞ்சிப் பூ

நீர் : சுனை நீர், அருவி நீர்.

முடிவுரை:

=> குறிஞ்சித் திணையின் கருப்பொருள்கள் குறித்து இவ்வாறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

15 ஆ) பரிபாடலில் முருகனின் சிறப்பு:

* முன்னுரை
* முருகனின் சிறப்பு
* முடிவுரை

முன்னுரை:

=> பரிபாடல் சிறப்பு வாய்ந்த நூலாகும். பலவகை பாக்களால் ஆனவை.

=> பரிபாடலின் பாவகை : பரிபாட்டு

=> திணை அகமும் புறமும் சார்ந்தது.

முருகனின் சிறப்புகள்:

“ ............ போர் மலைந்து,
சூர் மருங்கு அறுத்த சுடர்ப் படையோயே!
கறை இல் கார் மழை பொங்கி அன்ன
நறையின் நறும் புகை நனி அமர்ந்தோயே!
.....................
..................... அந்தணர் அறன் அமர்ந்தோயே

விளக்கம் :

=> சூரபத்மன் ஆகிய மாமரத்தினைக் கிளையோடு அழித்த சுடர்விடும் வேற்படையை உடையவன்

=> மாசில்லாத கார்காலத்தில் வெள்ளைய மேகம் பொங்கி எழுந்தாற் போன்ற நறுமணம் கமழும் அகில் புகையை விரும்புபவன்.

=> ஆறு முகங்களையும் 12 தோள்களையும் உடையவன் வள்ளியின் நலத்தை நயந்தவன் யாழின் இசையை விரும்புபவன்.

=> ஆற்றல் மிக்க புகழினை உடையவன்

=> ஈரமிக்க நெஞ்சினையும், அழிவில்லாத புகழினையும் கொண்டவன்.

இதுபோன்று இன்னும் பல

சிறப்புகளை எல்லாம் பெற்று விளங்குபவன் முருகப் பெருமான் ஆவார்.

முடிவுரை :

=> பாடலின் வழி முருகனின் சிறப்புகள் எடுத்துரைக்கப் பெறுகின்றன.

பகுதி - இ.

16. குறிஞ்சிப் பாட்டின் கபிலர் கனவு நிலையைப் பற்றி விவரிக்க.

குறிப்புச் சட்டகம்

→ முன்னுரை

→ அறத்தொடு நிற்றல்

→ தலைவியின் நிலை

→ தலைவி தேம்பல்

→ காதல் நோய்

→ தோழியின் நிலை

→ தலைவியை தழுவுதல்

→ தலைவியின் துன்பம்

→ முடிவுரை.

முன்னுரை:

2-8

* குறிஞ்சிப் பாட்டின் ஆசிரியர் கபிலர்
* 261 அடிகளைக் கொண்டது
* ஆசிரியப்பாவினால் ஆனது.
* 99 வகையான மலர்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அறத்தொடு நிற்றல்:

* தாயே நீ வாழ்வாயாக! நான் கூறுவதை விருப்பமுடன் கேட்பாயாக, தலைவியின்

அழகிய உடல் மெலிவடைகிறது தோள்கள் சுருங்குகின்றன. இந்நிலையில் தோழியானவள் தலைவியின் நிலையை கண்டு அச்சமடைந்து செவிலித்தாயிடம் நிலையை கூற அறத்தொடு நிற்கிறாள் தோழி

**தலைவியின் நிலை:**

* அழகிய மேனியானது மெலிவடைந்து எப்பொழுதும் தனிமை எண்ணம் தோன்றி எல்லாவற்றிற்கும் காரணமாக இருந்து இவள் மனதை கொல்ல செய்து கொண்டிருக்கும் நோயினை தலைவியின் நிலையின் வழி நின்று நான் கூறுகிறேன்

**தலைவி தேம்பல்:**

* எம் தந்தை பல தடைகளை போட்ட பின்பும் அதனை கடந்து வந்து உன்னை மணந்தேன். இதனை தாயிடம் கூறினால் புகழ் அல்லாமல் பழி சேரும். தந்தையிடம் எடுத்துக் கூறியபின்பும் அவர் மறுத்தால் எம் உயிர் நீங்கும் காலம் வரை காத்திருப்போம். அப்படி இல்லையென்றால் இப்பிறவி இல்லையென்றால் அடுத்த பிறவியில் சேர்வோம். இது உறுதி.

**காதல் நோய்:**

* மான்கள் விரும்புவதற்கு காரணமான அழகிய கண்கள் சிவந்து கலங்கியும் எதும் செய்ய இயலாதவளாய் பொறுக்க முடியாத காதல் நோயை கொண்டிருக்கிறாள்

தோழியின் நிலை:

* பகை கொண்டு போருக்கு தயாராக இருக்கும் இரண்டு மன்னர்களுக்கு இடையே தூது சென்று அவர்களின் பகையை நீக்கும் சான்றோர் போல,

* உனக்கும் காதல் நோயால் மெலிந்து கொண்டிருக்கும் தலைவியின் காதலுக்கும் இடையே பொருளும் அச்சம் கொண்டு நானும் வந்திருக்கிறேன்

தலைவனை தழுவுதல்:

* தலைவனால் தலைவி தீண்டப்பட்ட நிலையில் தலைவிக்கு நாணம், மடம், அச்சம் குணம் தோன்றியதால் அவனை விட்டு விலகி சென்றாள் ஆனால் தலைவன் அவளை விடாமல் தழுவினான்.

தலைவியின் இன்பம்:

* 'மழையால் தாக்கப்பட்ட மலர் போல' உடல் மெலிந்து இமைகள் கண்ணீரை உடையவளாக கலங்கியிருந்தாள்.

* 'வலையில் சிக்கிய மயில் போல' அவர் வருகின்ற வழியெல்லாம் இன்பம் என நினைத்து கலங்கினாள்.

முடிவுரை:

* தமிழரின் காதல் பண்பு நெறியை எடுத்துரைப்பதற்காக பாடப்பெற்றது குறிஞ்சிப் பாடல் ஆகும்.

* களவு நிலை குறித்த செய்திகள் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

17. நற்றிணையில் முல்லை திணைப் பாடல்கள் குறித்து விளக்குக:-

குறிப்புச் சட்டகம்

=> முன்னுரை

=> வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

=> வினைவயிற் பிரிதல் ஆற்றாத தலைவி சொல்லியது.

=> முடிவுரை

முன்னுரை:

* நல் + திணை -> நற்றிணை

* நற்றிணை - நல்ல ஒழுக்கலாறு

* 9 முதல் 12 அடிகளை கொண்டது.

* ஆசிரியப்பாவால் ஆனது

* தொகுத்தவர் - பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி

## வினைமுற்ற மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியது:

* ஆசிரியர் : கபிலர்

* திணை : முல்லை

* கூற்று : வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்கு சொல்லியது.

* விளக்கம் :

=> தலைவி காடுகள் சூழ்ந்த ஊரின் அருகே உள்ளாள்.

=> உடும்புகளை வேட்டையாடியும் தவளைகளை அகழ்ந்தும் புற்களை வெட்டி ஈசல்களை சேர்த்து அருந்தும் பலவகையான பண்டங்களை எடுத்து சென்றனர்.

=> அவ்வாறு எடுத்து சென்ற பலவகையா பண்டங்களையும் தோளில் சுமந்து வந்த சோர்வி, கருவிகளையும் கீழே போட்டுவிட்டு கண்துஞ்சி மயங்கி கிடந்தன.

=> அப்பொழுது முல்லை மலர் அத்நாட்டில் மணம் கமழ்ந்து மலர்ந்து இருக்கும். அது தலைவன் வீடு திரும்பும் கால அறிகுறி ஆகும்.

⇒ நான் செல்லாவிடின் தலைவி மிகவும் வருந்துவாள்.

⇒ ஆதலால், தேரினை விரைந்து ஓட்டி செல்வாயாக என்று தேர்ப்பாகனிடம் கூறுவது ஆகும்.

வினைவயிற் பிரிதல் ஆற்றாளாய தலைவி சொல்லியது.

* ஆசிரியர் : சேந்தம்பூதனார்
* திணை : முல்லை
* கூற்று : வினைவயிற் பிரிதல் ஆற்றாளாய தலைவி சொல்லியது.
* விளக்கம் :

⇒ தலைவன் குறித்த நேரத்தில் வராமையால் தலைவி மிகவும் துன்புற்றாள். ஞாயிறு உயர்ந்த மலையின் பின் மறைந்தது. பறவைகள் தன் குஞ்சுகளை மாலைப் பொழுதில் சென்று தன் கூட்டினை அடைந்தது.

⇒ முல்லை மலர்களானது மலர்ந்தது. காந்தள் மலர்கள் தன் மலரை விளக்கென ஏந்தி நின்றது.

⇒ மேற்கண்ட இவையின்கண் உயிர்கொண்டு தங்கி இருக்க மாட்டார்,

* ஆனால் அவர் நாட்டில் இப்படி மாலைபொழுது இல்லைபோலும் என்று தலைவி வருந்துகிறாள்.

முடிவுரை :

* நற்றிணையில் முல்லை திணை பாடல்களில் கூறப்பட்டுள்ள செய்திகள் குறித்து இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

18 வேட்டைப் பத்து கூறும் செய்திகள் :

குறிப்புச் சட்டகம் :

* முன்னுரை
* வேட்டைப் பத்து விளக்கம்
* வேட்டைப்பத்து கூறும் செய்திகள்
* முடிவுரை.

முன்னுரை :

⇒ வேட்டைப் பத்தில் கூறப்பட்டுள்ள ஏராளமான செய்திகளைப் பற்றி இக்கட்டுரையில் பின்வருமாறு காண்போம்.

## வேட்கைப் பத்து விளக்கம்

* வேட்கை - விருப்பம்

* அன்பன் ஐந்திணைக்கு உரிய களவு, கற்பு இருவகை ஒழுக்கங்களிலும் தலைவன் பிரிந்திருந்த காலத்தில் தலைவியும் தோழியாகும் யாதனை விரும்பி இருந்தனள் அன்பைத் தலைமகன்பால் தோழி கூறுவதாக அமையும் பத்து செய்யுள் தொகுதி வேட்கைப் பத்தாயிற்று.

## வேட்கைப் பத்தில் கூறும் செய்திகள்:

“வாழி ஆதன் வாழி அவினி!
நெல் பல பொலிக ......”

=> எம் மன்னனாகிய ஆதன் அவினி நெடிது வாழ வேண்டும். உன் நாட்டில் நெல் வளம் பெருக வேண்டும். நிறைய செல்வங்களை பெற வேண்டும் என்று நினைப்பவள் தலைவி.

ஆனால் தலைவன் நறுமணம் கமழும் நாற்றி மலர்களையும், புலால் நாற்றம் வீசும் மீன்களைப் பெற்ற கடத்தில் வளையும் ஊரை உடையவன் தலைவன் ஆவான்.

⇒ எம்மன்னனாகிய ஆதன் அவினி நெடிது வாழ வேண்டும்.

அவன் நாட்டில் பால் வளம் பெருக வேண்டும் எருது எண்ணிலாக இருக்க வேண்டும் என விரும்புவளே தலைவி. பின் விளைய போகும் விளைச்சலுக்காக இப்போதே விதைத்த உழவன் மீண்டும் இருந்த நெல் மணியை விழுந்து எடுக்கச் சென்றான்

⇒ பகைவர் அவனுக்குத் தோற்றுப் புல்லை அருந்துவார்கள். அந்தணர்கள் வேதம் ஓதுக. என தலைவி கூறுவாள்

ஆனால் தலைவன் பூத்த கரும்பினையும் காய்த்த நெல்லையும் மிகுதியாகக் கொண்ட ஊரன் ஆவான்.

⇒ அவன் பகை தணிவதாக! அவன் வாழும் ஆண்டுகள் நீளுமாக என தலைவி விரும்பி வேண்டுவாள்.

யாமோ ஆழ்ந்த பொய்கையிடத்தே மணம் கமழும் தாமரைகளையுடைய தண்ணிய துறைகளைக் கொண்டவன் தலைவன்.

⇒ அறப்பயன்கள் பெருகும் சிறக்க வேண்டும் மறப்பயன்கள் அறவே இல்லாது இருக்க வேண்டும் என தலைவன் விரும்புவான்.

கயல் மீன்களை விரும்பி உண்ட நாரை வைக்கோல் போரில் தங்குவதற்கு இடமான தண்ணிய துறைகளை உடைய ஊரன்.

## ① முடிவுரை

* வேட்கைப் பத்தில் கூறப்படும் செய்திகள் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளன.